# *பிரதிஷ்டை*

*சிலர் தங்களுடைய பாவத்தை அறிக்கை செய்து பாவ மன்னிப்பைப் பெற்றவுடனே தாங்கள் பாவமற்ற நிலையை அடைந்துவிட்டோம் என்று தங்களைப் பற்றி நினைக்கிறார்கள். மேலும் அதைத்தான் தங்களது பிரதிஷ்டை என்றும் கருதுகிறார்கள்.*

*இது எப்படி சரியாகும்? ஆதாமுக்குள் சபிக்கப்பட்ட அபூரண நிலையிலிருக்கும் மனிதன் அவனது ஜென்ம சுபாவ பாவத்திற்குள்கிடக்கிறான். ஒருவன் இயேசு கிறிஸ்துவினால் மன்னிப்பைப் பெற்ற பின்பும் அவனது ஜென்ம பாவ சுபாவம் அவனில் நிலைக் கொண்டிருத்தலை 1 யோவான் 1:8, கலா 5: 17; 2: 11, ரோமர் 8:15- 18,எரே 13:23 பகுதிகளிலிருந்து அறிகிறோம். ஆதலால் பாவமற்ற நிலையை அடைந்துவிட்டோம் என்று நினைப்பதுவும் அதைத்தான் தங்களுடைய பிரதிஷ்டை என்று கருதுவதும் தவறாகும்.*

*தெளிவான முறையில் சரியாக பிரதிஷ்டையைப் பற்றி நாம் அறிந்து கொள்ளுதல் நமது முக்கிய கடமையாகும். அதனை தகுந்த முறையில் கற்றுக் கொள்ள, பரிசுத்த பவுல் பிரதிஷ்டை செய்யுமாறு விசேஷமாக மணவாட்டி சபைக்கு ரோமர் 12 :1 இல் கொடுக்கும் அழைப்பை நாம் நம்முடைய தியானத்திற்கு எடுத்துக் கொள்ளுவோம்.*

*"சகோதரரே, நீங்கள் உங்கள் சரிரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை"*

## *பிரதிஷ்டை என்றால் என்ன*

*நமது வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் பிரதிஷ்டைகளில் சிலவற்றை நாம் சிந்திப்போமானால் பிரதிஷ்டை என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ள முடியும்.*

*யெகோவாவை அறியாத புறஜாதியாரிடமிருந்து இஸ்ரவேலரைப் பிரித்து எடுத்து, யெகோவா தேவனுடன் உடன்படிக்கையின் பந்தத்துக்குள்ளாக பிரத்தியேகப்படுத்தும் நிலையே பிரதிஷ்டையாகும்.*

சாதாரண இஸ்ரவேலர்களிடமிருந்து லேவியர்களை தனியாகப் பிரித்து அவர்களை தேவனுடைய பணிவிடைக்காக பிரத்தியேகப் படுத்தியது பிரதிஷ்டையாகும் ('எண் 3:12:8:16) சாதாரண லேவியர்களிடமிருந்து ஆசாரியர்களைப் பிரித்து எடுத்து தேவனுக்கென்று இன்னும் நெருக்கமானபலி செலுத்தும் உறவுக்கு பிரத்தியேகப்படுத்திய நிலையே பிரதிஷ்டையாகும்.

ஓய்வு நாள் பிற நாட்களைக்காட்டிலும் பிரத்தியேகமாக்கப்பட்ட நிலை. அதைப் போலவே ஓய்வு வாரம், ஓய்வு வருடம் தனிப் படுத்தப்பட்ட நிலை. இந்த ஓய்வு காலங்கள் கர்த்தருடைய காலங்களாகப் பிரத்தியேகப்படுத்தப்பட்ட நிலை பிரதிஷ்டையாகும்.

பரிசுத்தமாக்கப்பட்ட பாத்திரங்கள், இஸ்ரவேலரின் மற்ற பாத்திரங்களிலிருந்து பிரித்து ஆசரிப்புக் கூடார பிரயோகத் திற்காகப் பிரத்தியேகப்படுத்தப்பட்ட நிலை பிரதிஷ்டையாகும்.

இயேசு கிறிஸ்து தன்னை உலகத்திலிருந்து பிரித்து தனது பிதாவாகிய யெகோவா தேவனுக்கு பிரத்தியேகப்படுத்திக் கொண்டதே பிரதிஷ்டையாகும். சங் 40:7, 8, எபி 10:7, 9.

அப்போஸ்தலர்கள் தங்களை உலகத்திலிருந்து பிரித்து இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்காகப் பிரத்தியேகப்படுத்தியதே பிரதிஷ்டையாகும்.

மேற்கண்ட ஏழு உதாரணங்களிலிருந்து பிரதிஷ்டை அல்லது அர்ப்பணித்தல் என்றால் என்ன என்பதை நாம் யூகிக்க முடிகிறது. பொதுவான சாதாரண நிலையிலிருந்து ஒருவன் தன்னை பிரித்தெடுத்து தேவனுக்காகப் பிரத்தியேகப்படுத்திக் கொள்ளுதலே பிரதிஷ்டையாகும்.

## கிறிஸ்தவர்களுக்கு பிரதிஷ்டை எதைக் குறிக்கிறது

***பிரித்து எடுத்தல்*** : வெளி 18 : 4 என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உட்படாமலும் அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.

**பிரத்தியேகப்படுத்தல்** : யோவன் 8 : 31, "நீங்கள் என் வார்த்தையில் நிலைத்திருந்தால், மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்". ரோமர் 6 : 19 ".... இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுங்கள்".

அநேகர், கிறிஸ்தவ மண்டலங்களில் உள்ள ஸ்தாபனக் கொள்கைகளுக்கும், வழிபாடுகளுக்கும், வைபவ ஆசாரங்களுக்கும், விழாக்களுக்கும், தங்களை அர்ப்பணித்து உற்சாகத்துடனும், பக்தியுடனும், வைராக்கியத்துடனும், சேவிக்கிறதை பார்க்கிறோம். இவைகளின் மூலம் அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு தங்களை அர்ப்பணித்திருக்கிறோம் என்றும் அவருக்கு தாங்கள் செய்யும் தொண்டு என்றும் நம்புகிறார்கள். ஒருவனது அர்ப்பணிப்பு அவன் சேர்ந்திருக்கும் ஸ்தாபனங்களுக்கும் அதன் கொள்கைகளுக்கும், ஆச்சாரங்களுக்கும் இராது தேவ வார்த்தைக்கும், தேவ ஏற்பாட்டிற்குமேயுள்ளதாக இருத்தல் அவசியம். இதுவே தேவனுக்கு உகந்தது. உலகத்தில் மனிதனால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் குகைகளும் கன்மலையுமாகிய ஸ்தாபனங்கள் (வெளி 6:15 - 17) மகா உபத்திரவத்தின் நாளில் உங்களை தப்புவிக்காதே.

ஆதலால் தப்பறைகளும், உலகத்தனமும் நிறைந்திருக்கும் கிறிஸ்தவ மண்டலமாகிய போப்பின் மார்க்கமும் புராட்டஸ்டன்ட் பிரிவுகளும் கொண்ட பாபிலோனை விட்டு (வெளி 18:4) நம்மைநாமே பிரித்து தேவ சத்தியத்திற்கும் அதன் பணிக்கும் பிரத்தியேகப்படுத்துவதே பிரதிஷ்டையாகும் (யோவா 8:31 ரோமர் 6:19)

## பிரதிஷ்டை செய்தலுக்கு யார் அழைக்கப்படுகிறார்கள்

உலகத்தாரை தேவன் அழைக்கவில்லை. ஏற்கனவே பிரதிஷ்டை செய்திருக்கிறவர்களையும் அழைக்கவில்லை. ஏனெனில் ஏற்கனவே பிரதிஷ்டை செய்திருக்கிறவர்கள் புதிதாக பிரதிஷ்டை செய்ய அவசியமில்லை. இவர்கள், பிரதிஷ்டையின் உடன்படிக்கையை (ஒப்பந்தத்தை) அனுதினமும் புதுப்பித்து செயல்புரிவது இவர்களது கடமையாகும். இவ்வாறாக ஏற்கனவே பிரதிஷ்டை செய்திருக்கிறவர்கள் அனுதின பிரதிஷ்டைக்கே அழைக்கப்படுகிறார்கள்.

புதிதாக பிரதிஷ்டைக்கு அழைக்கப்படுகிறவர்கள் யார் என்பது நமது கேள்வி.

ரோமர் 12:1 இல் 'சகோதரரே' என்று அறைகூவி பிரதிஷ்டை பண்ணும்படி அழைக்கப்படுகிறவர்கள் யார்? இயேசு கிறிஸ்துவின் பலியிலும் அவரது மீட்கும் பொருளிலும் விசுவாசிக்கிறவர்கள் நீதிமான்களாக தேவனால் கருதப்படுகிறார்கள்.

இவ்விதமான அனுபவத்திற்குள் வந்தவர்களே சகோதரர்கள் ஆவார்கள். அப்படிப்பட்ட சகோதரரையே சுவிசேஷ யுகத்திற்கேயுரிய பரமஅழைப்புக்கு பிரதிஷ்டை பண்ணுமாறு பரிசுத்த பவுல் ரோமர் 12: 1இல் அழைக்கிறார். ஆதலால் விசுவாசத்தினாலே நீதிமான்களாகக் கருதப்படும் சகோதரருக்கே இந்த பிரதிஷ்டை செய்வதற்குரிய அழைப்பு கொடுக்கப்படுகிறதை அறிகிறோம். தற்கால 'பிரதிஷ்டை வகுப்பாருக்கும் இந்த வசனம் அழைப்பு கொடுக்கிறதாயிருக்கிறது.

## பிரதிஷ்டையில் செய்ய வேண்டியவைகள் யாவை

(1) சுயசித்தத்தை விட்டு விடுதல் (மத் 16:26)

(2) தேவவார்த்தையைத் தியானித்தல் (மாற் 10 : 36 -39)

(3) விழித்திருத்தல் (கொலோ 4 : 2)

(4) ஜெபித்தல் (மத் 26 : 41)

(5) தேவவார்த்தையை அப்பியாசித்தல் (யாக் 1:22)

(6) தேவவார்த்தையை பரப்புதல் (2 தீமோ 4:2)

(7) சத்தியத்தினிமித்தம் தீமையை சகித்தல் (2 தீமோ 2 : 12)

இவ்விதமாக நமது மாம்ஷீகத்தை தேவனுக்குச் சரணடையச் செய்து தேவனுடைய சித்தத்தை நமதாக்கிக் கொள்ளுதலே பிரதிஷ்டையில் இயங்க வேண்டிய அம்சங்களாகும்.

## பிரதிஷ்டையின் குண இயல்புகள் என்ன

ரோமர் 12:1இல் பரிசுத்த பவுல் நான்கு சிறந்த பதங்களை உபயோகித்து பிரதிஷ்டையைச் செய்ய அழைப்பு விடுகிறார்.

**(1) பரிசுத்தமும் (Holy):** பரிசுத்தத்தின் மன இயல்பாகத்திகழ்வது அன்பாகும். ஆதலால் பிரதிஷ்டையில் அன்பு (LOVE) வெளிப்பட வேண்டும்.

(2) ***பிரியமான*** (**Acceptable**) **:** *தேவனுக்கேற்கும் பிரியம் தேவ நீதியில் வாசமாயிருக்கிறது.* *ஆதலால் நீதியானது* (JUSTICE) *பிரதிஷ்டையில் விளங்க வேண்டும்.*

(3) ***ஜீவ*** **(Living) :** *'ஜீவ' என்ற வார்த்தை சக்தி, பெலன்* (Energy) *என்ற கருத்தையும் உடையதாகக் கருதலாம். ஆதலால் பிரதிஷ்டையில் தனது முழுசக்தியையும்* (Energy or POWER) *அப்பியாசப்படுத்த வேண்டும்.*

(4) ***புத்தியுள்ள*** **(Reasonable) :** *யெகோவாவுக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; ஆதலால் பிரதிஷ்டை செய்வதின் மூலம் ஞானம்* (WISDOM) *விளங்குகிறது.*

*இவ்விதமாகத் தேவனுடைய மிகச் சிறந்த குணசீல பண்புகளான அன்பு, நீதி, வல்லமை, ஞானம் ஆகிய நான்கும் பிரதிஷ்டையில் திகழ வேண்டும் என்று ரோம* 12: 1*இல் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதை அறிகிறோம். ஆதலால் பிரதிஷ்டையில் இந்த நான்கு குணசீலப்பண்புகளும் விளங்குதலே பிரதிஷ்டையை நிரூபிக்கிறதாயிருக்கிறது.*

## ***பிரதிஷ்டை ஏன் செய்ய வேண்டும்***

*நாம் யெகோவா தேவனால் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதாலும் அவராலேயே மீட்கப்பட்டிருப்பதாலும் அவருக்கே சொந்தமாய் இருக்கிறோம். ஆதலால் எல்லாவற்றிலேயும் நாம் அவருக்கு கடமைப்பட்டிருக்கிறோம்.* (*மத்* 22 : 37)

*பாவிகளாயிருக்கையிலே நம்மை நேசித்து தமது குமாரனையே தந்த தேவனுக்கு பிரதிஷ்டையின் மூலம் நன்றிக் கடன் செலுத்துகிறோம். இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்த தேவனைமகிமைப்படுத்துகிறோம்.* (1*பேது* 4 : 11) *பிரதிஷ்டையானது பிரதிஷ்டை செய்தவர்களையும், மற்றவர்களையும் பாவச்சேற்றி லிருந்து தூக்கி எடுக்கும்* (1*கொரி* 6:9-11)

*பிரதிஷ்டையானது தீமையை மேற்கொள்ளும்* (*ரோம* 12: 19 - 21) *இப்பேர்பட்ட விசேஷ சிலாக்கியங்களையும் உன்னதமான அரிதான தற்பரிசோதனையையும் பிரிதிஷ்டையின் மூலம் ஆசீர்வாதமாக அடைகிறோம். இவைகளே பிரதிஷ்டை செய்தலுக்கு உந்தும் விசையாகயிருக்கின்றன.*

## பிரதிஷ்டை சாத்தியமா

இது சாத்தியம். ஆனால் நம்முடைய பெலத்தினால் அல்ல. தேவன் அருளும் பரிசுத்தாவியின் பெலத்தின் மூலமும் வார்த்தையின் மூலமும் வழிநடத்துதலின் மூலமும் சாத்தியமாகும். (2 கொரி 3:5, பிலி : 4 : 13) பிரதிஷ்டைக்கு விரோதிகள் பாவம் (எபி 1:13; 12: 1) தப்பறை (1 தீமோ 6 : 20, 21) சுயநலம் (ரோம 8:13) லோகத்தனம் (யாக் 4:4) முதலியன.

## பிரதிஷ்டையை எதனால் உருவாக்கி செயலாற்ற முடியும்

தண்டனைக்குப் பயந்து இதனை செய்வது முடியாத காரியம். மற்றவர்கள் தன்னை உகந்தவன் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினாலும் இந்த பிரதிஷ்டையை செய்ய முடியாது. ஒருவேளை வெகுமதியாக சிறப்பான அந்தஸ்து கிடைக்கும் என்ற நோக்கத்தினாலும் அல்ல. ஆனால், நமக்காக தமது குமாரனையே தந்து நம்மிடத்தில் தேவன் காட்டிய அன்பினால் ஏவப்பட்டு தேவனில் விசுவாச நன்றியுணர்வுடனும் அவரது மட்டற்ற கிருபையின் யத்தனங்களின் மேலுள்ள பரம ரசனையுடனும் உள்ள மனநிலையிலேயே இந்த பிரதிஷ்டை உருவாகி செயல்படுகிறது.

## எப்பொழுது, எங்கு, எதுவரை பிரதிஷ்டை செய்ய வேண்டும்

தேவன் நமக்கு ஏற்படுத்தியிருக்கும் விலைமதியாத மீட்கும் பொருளின் மகிமையை உணர்ந்தவுடனே (லூக் 14 : 27, 28) பிறர் முன்னால் அல்ல தேவனிடத்தில் மட்டுமே பிரதிஷ்டையை செய்து நித்தியத்திற்கும் கடைபிடித்தல் அவசியம். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ விரும்புகிறவர்கள் அனைவரும் பிரதிஷ்டை செய்து கடை பிடித்தால்தான் ஜீவனுடன் வாழ முடியும். பிரதிஷ்டையில்லாமல் ஜீவனை பெற வாய்ப்பு இல்லாததால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பங்கடையவே முடியாது. ஆதலால் இருப்புகோலால் சிட்சிக்கப்பட்டு பலவந்த நிர்ப்பந்தத்தில் பிரதிஷ்டை செய்யும் முழு பெஸிலியா காலத்தைவிட நல்ல சமயமான முடிந்து கொண்டு வரும் எபிபெனி காலத்திலிருக்கிற நமக்கு சுயமாய் பிரதிஷ்டை செய்ய அரியதோர் வாய்ப்பினையை தேவன் அனுக்கிரகமாக இன்னும் கூட்டி வைத்திருக்கிறார். ஆதலால் பின்னால் தள்ளிப்போடாது இன்றே பிரதிஷ்டையை சுயமாய் செய்வோமாக. (சங் 95:8)

# எந்த முறையில் பிரதிஷ்டையை அடையாளப்படுத்த வேண்டும்

*நீர் தெளித்தலினாலேயோ, நீர் ஊற்றப்படுதலினாலேயோ அல்லாமல், நீரில் மூழ்கி எழுதலினாலேயே அடையாளப்படுத்த வேண்டும். நீரில் மூழ்குவதில் மரணத்திற்குள்ளாக அடக்கம் செய்யப்படுவதையும், நீரினின்று எழுந்திருப்பதில் ஜீவனில் புதிதாய் இருத்தலுக்குள் பிரத்தியேகப்படுத்தப்பட்டு நிற்பதையும் சித்தரிக்கின்றது. (ரோமர் 6 : 4) மேற்கூறிய கருத்தை நீர்த் தெளித்தலிலோ, நீர் ஊற்றப்படுதலிலோ அடையாளப்படுத்த முடியுமோ? முடியாதே. ஆதலால் நீர் முழுக்கு ஸ்நானத்தைக் கொண்டே பிரதிஷ்டையை அடையாளப்படுத்துதல் அவசியம்.*

# பிரதிஷ்டையின் அனுகூலங்கள் யாவை

(1) *பிரதிஷ்டையினால் தேவனோடும்* (1*யோ* 1:3) *கிறிஸ்துவோடும்* (1*கொரி* 1: 9) *சகோதரர்களோடும்* (1*யோ* 1: 7) *ஐக்கியம் கிடைக்கிறது.*

(2) *இம்மையில் தேவனை விசுவாசக் கண்களோடு பார்க்கச் செய்கிறது* (*யோவா* 14:8,9)

(3) *தேவனுடைய ஞானம், நீதி, அன்பு வல்லமை ஆகிய குணசீலங்களின் பரிபூரணத்தையும், மகிமையையும் ஆழ்ந்து உணரவேண்டிய மனோசக்தியையும் நுண்ணறிவையும் அளிக்கிறது* (*ரோம* 11:32-34)

(4) *கிறிஸ்துவினுடைய மகிமையான உன்னதமான மீட்கும் பலியில் அடங்கிய தெய்வீகத் திட்டங்களை ஆழ்ந்தறியக் கூடிய தனிச்சிறப்புரிமையும் தருகிறது* (1 *கொரி* 2: 10)

(5) *பிரதிஷ்டை மறுமையின் பணிக்கு நம்மை பயிற்றுவிக்கிறது* (1*கொரி* 11:32, 2 *தெச* 1:5, 2 *கொரி* 5: 18, 19)

(6) சிறந்த நல்வாழ்வை இம்மையிலும் மறுமையிலும் கொடுக்கிறது (மாற் 10:30, ரோமர் 6:22)

(7) முடிவில்லாத மறுமையில் யெகோவா தேவனோடு அவரது திட்டங்களில் செயல்புரியும் உன்னதமான ஆசீர்வாதமான வாய்ப்பினையையும் ஈவாக அளிக்கிறது. (2 கொரி 3:6;5:19)

✡✡✡✡✡✡✡